# அலியான்ஸ் லை.ஃப் "ஸ்மார் புரொட்டெக்ஷன்"

**"ஸ்மார் புரொட்டெக்ஷன்" என்றால் என்ன?**

- ஹட்ச் (Hutch) முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு அலியான்ஸ் லை.ஃப் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட் நிறுவனத்தினால் வழங்கப்படும் காப்புறுதியாகும்.
- அலியான்ஸ் முகவர்கள் மூலமாகவோ அல்லது ஹட்ச் வலையமைப்பில் 226 என டையல் செய்வதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.
- இக்காப்புறுதி திட்டம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| அனுகூலங்கள் | தொகை (ரூ.) |
|---|---|
| உயிரிழப்புக்கான காப்பீடு | 100,000 |
| வைத்தியசாலை அனுமதிக்கான காப்பீடு | 1,000 |
| டெங்கு நோய்க்கான காப்பீடு | 10,000 |

**காப்பீட்டு கால எல்லை**

- முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு அடுத்த காலண்டர் மாதத்திலிருந்து ஆரம்பமாகும்.
- தினசரி தவணைக்கட்டணம் முழுமாதத்துக்கு கழிக்காவிடின் காப்பீடு சார்பு விகித அடிப்படையில் அமையும்.

**தவணைக்கட்டணம் எவ்வாறு கழிக்கப்படும் ?**

- ஒருமுறை வாடிக்கையாளர் காப்புறுதி திட்டத்தில் பதிவுசெய்ததன் பின்னர் தவணைக்கட்டணமானது தான்நியக்கமாக தினசரி அறவிடப்படும்.

**யார் சந்தாதாரராக முடியும்?**

- 18-64 வயதுக்குட்பட்ட, தனது தேசிய அடையாள அட்டையின் கீழ் எந்தவொரு இணைப்பினை பெற்ற ஹட்ச் (Hutch ) முற்கொடுப்பனவு/ பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள் இச்சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

**தனியொருவர் எத்தனை காப்புறுதிகளை பெற்றுக்கொள்ள முடியும்?**

- ஒரு தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்கு ஒரு காப்புறுதியை பெற்றுக்கொள்ள முடியும்.(காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாகும்)

**நடைமுறையில் உள்ள காப்புறுதியொன்றை எவ்வாறு இரத்து செய்வது?**

- ஹட்ச் (Hutch) வலையமைப்பிலிருந்து 226 என்ற அலியான்ஸ் லை.ஃப்வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்கு அழைத்து, காப்புறுதியை இரத்து செய்யுமாறு கோர முடியும்.

**தினசரி / மாதாந்த தவணைக்கட்டணங்களின் விபரம்**

- ரூ.4.50 + வரிகள் (நாளொன்றுக்கு)

**காப்பீட்டுக்கான பரிந்துரைக்கப்படும் நபரை பயனாளியை எவ்வாறு முன்மொழிவது?**

- உயிரிழப்பு தவிர்ந்த ஏனைய அனைத்து காப்பீடுகளும் சந்தாதாரருக்கு மட்டுமே வழங்கப்படும். உயிரிழப்புக்கான காப்பீடு சந்தாதாரரின் சட்ட ரீதியான வாரிசுக்கு மட்டுமே கையளிக்கப்படும்.

**காப்பீட்டுகளை எவ்வாறு கோருவது?**

- அலியான்ஸ் ஆயள்காப்புறுதியின் வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்கு அழைப்பை ஏற்படுத்தவும் - 0112317988/89

**ஒருவேளை சந்தாதாரர் விபத்தினால் உயிரிழந்தால், அதற்கான காப்பீடுகள் வழங்கப்படுமா?**

- ஆம்

**வைத்தியசாலையில் அனுமதிக்கும் அனுகூலங்கள் யாவை?**

- இந்த காப்புறுதி திட்டத்தின் கீழ் சந்தாதாரர் வைத்தியசாலையில் அனுமதிக்காப்பட்டால், அதற்கான தினசரி காப்பீட்டு நன்மையை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் தீவிர சிகிச்சை பிரிவில் (ICU) அனுமதிக்கப்பட்டால் காப்பீட்டு நன்மை இரட்டிப்பாக கிடைக்கப்படும்.
- ICU வில் அனுமதிக்கப்படாவிட்டால் வருடமொன்றில் அதிகபட்சம் 20 நாட்களுக்கான நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்
- ICU வில் அனுமதிக்கப்பட்டால் வருடமொன்றில் அதிகபட்சம் 10 நாட்களுக்கான நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.
- மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 48 மணித்தியாலங்களின் பின்னரே இக்காப்பிட்டு நன்மையை பெற்றுக்கொள்ள முடியும்.
- அறிவிக்கப்படதன் பின்னர் 90 நாட்கள் காத்திருப்பு காலம் உள்வாங்கப்படும்.

**டெங்கு நோய்க்கான காப்பீடு குறித்த நிபந்தனைகள் யாவை?**

- நோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். (அரச அல்லது தனியார் வைத்தியசாலை )
- NS1 அன்டிஜென் ஆய்வறிக்கையில் நோயானது உறுதி செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும். (ஆய்வறிக்கையில் நோயாளரின் பெயர் மற்றும் வயது குறித்த விபரங்களை கொண்டிருக்க வேண்டும்.)
- நோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போதோ அல்லது அனுமதிக்கப்பட்டு 72 மணித்தியாலங்களுக்குள்ளோ, NS1 அன்டிஜென் ஆய்வறிக்கையில் டெங்கு நோயானது உறுதி செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும்.
- அறிவிக்கப்படதன் பின்னர் 90 நாட்கள் காத்திருப்பு காலம் உள்வாங்கப்படும்.
- வழங்கப்படும் அதிகபட்ச காப்பீட்டு தொகை
  - டெங்கு நோய்க்கான காப்பீட்டு தொகை (10,000)
  - வைத்தியசாலை அனுமதி (1,000) x வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் காலப்பகுதி

**எந்தனை தடவைகள் டெங்கு நோய்க்கான காப்பீட்டினை பெற்றுக்கொள்ள முடியும் ?**

- ஓராண்டு காலப்பகுதியில் ஒரு தடவை மாத்திரம் டெங்கு நோய்க்கான காப்பீடு நன்மையை பெற்றுக்கொள்ள முடியும்.

**காப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்காக ஏதேனும் படிவங்களை சமர்ப்பிக்க வேண்டுமா?**

- உயிரிழப்புக்கான காப்பீடுகளை கோரும் போது மரணசான்றிதழ் / DT அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டியது போதுமானதாகும்.
- பின்வரும் காப்பீட்டு கோரிக்கைகளின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு

    - மரணத்தின் போது வழங்கப்படும் காப்பீட்டு நன்மைக்கு
        - மரண சான்றிதழ்
    - வைத்தியசாலை அனுமதிக்கான காப்பீட்டு நன்மைக்கு
        - நோயறிதல் அட்டை
    - டெங்கு நோய்க்கான காப்பீட்டு நன்மைக்கு
        - நோயறிதல் அட்டை
        - NS1 அன்டிஜென் ஆய்வறிக்கை

**காப்பீட்டு கோரிக்கை அல்லது விசாரனைகளின் போது வழங்கவேண்டிய ஆவணங்கள் யாவை?**

- தேசிய அடையாள இலக்கம்
- தொலைபேசி இலக்கம்
- உரிமைகோருபவரின் பெயர்
- காப்புறுதிதாரர் உடனான உறவுமுறையை உறுதி செய்வதற்கான சான்றிதழ்கள்

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் யாவை ?**

- www.Allianz.lk அல்லது www.hutch.lk என்ற வலைதளத்தின் ஊடாக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பார்வையிட முடியும்.

**பொதுவான விலக்குகள் யாவை ?**

- முன்பே இருக்கும் நிலைமைகள்
- ஆயுர்வேத சிகிச்சைகள்
- அபாயகரமான விளையாட்டுகளில் ஈடுபடுவது
- பயணியாக தவிர்த்து பறக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- விவேகமான அல்லது பைத்தியக்காரத்தனமாக தற்கொலைக்கு முயற்சியினால் ஏற்படுத்திக்கொள்ளும் காயம்.
- மது மற்றும் போதைப்பொருளின் செல்வாக்கின் கீழ் ஏற்படும் விபத்து
- எந்தவொரு பிறப்பின் நிலை
- மருத்துவ ஆலோசனையைப் பெற அல்லது பின்பற்றத் தவறுவது
- போர், படையெடுப்பு, வெளிநாட்டு எதிரிகளின் செயல்பாடுகள், போர் (போர் அறிவிக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும்), ஆயுதமேந்திய அல்லது நிராயுதபாணியான சண்டை, உள்நாட்டுப் போர், கலகம், கிளர்ச்சி, பயங்கரவாதச் செயல், புரட்சி, கிளர்ச்சி, இராணுவம் அல்லது அபகரிக்கப்பட்ட சக்தி, கிளர்ச்சி அல்லது உள்நாட்டு குழப்பம், வேலைநிறுத்தங்கள்
- எந்தவொரு கடற்படை, இராணுவம், பொலிஸ், விமானப்படை அல்லது இது போன்ற பாதுகாப்பு சேவை (அமைதி நேர பயிற்சி உட்பட)
- குற்றவியல் அல்லது சட்டவிரோத செயலில் காப்பீடு செய்யப்பட்ட நபரின் பங்கேற்பு
- காப்புறுதி திகதிக்கு முன்னராக ஏதேனும் காயம் ஏற்பட்டால்

- அணு மாசுபாடு: அணு, எரிபொருள் பொருட்களின் கதிரியக்கம், வெடிக்கும் அல்லது அபாயகரமான தன்மை அல்லது அணு, எரிபொருள் பொருட்களால் மாசுபடுத்தப்பட்ட சொத்து அல்லது அத்தகைய சூழலில் ஏற்படும் விபத்து.
- மேலும் விபரங்களுக்கு தயவுசெய்து www.Allianz.lk அல்லது www.hutch.lk யைப் பார்வையிடவும்

**உரிமைகோரல் எவ்வாறு தீர்க்கப்பட்டது என்பதை அறிவது எப்படி?**

- வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கிற்கு பணப்பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்தும் ஒரு குருந்தகவல் வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்கப்படும்

**முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு சந்தாதாரர்களின் மாதாந்த தவணைக்கட்டணம் எவ்வாறு காண்பிக்கப்படும்?**

- பிற்கொடுப்பனவுக்கு (Post paid) - அலியான்ஸ் லைஃப் ஸ்மார் புரொட்டெக்ஷன் எனும் பெயர் குறிப்பிடப்பட்ட குறுந்தகவல் (SMS) மூலம் அறிவிக்கப்படும்.

- முற்கொடுப்பனவுக்கு (Pre paid) - குறுந்தகவல் (SMS) மூலம் தெரிவிக்கப்படும்.

இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஏதேனும் முரண்பாடுகளோ அல்லது தெளிவின்மையோ காணப்படுமானால் www.allianz.lk அல்லது www.hutch.lk இல் பதிவேற்றப்பட்டுள்ள ஆவணத்தை பார்வையிடவும்